ஸ்ரீ: வானாமாமலை

ஸ்ரீமதே இராமானுஜாய நம:

# 4. அனைத்தழகும் கண்ட ரங்கப்ப ராமானுஜ ஸ்வாமி

## தனியன்

ஸௌம்யோபயந்த்ரு முனிவர்ய பத$_{3}$ாப்$_{4}$ஜ ப்$_{4}$ருங்கே
வாநாத்$_{3}$ரி ஸம்யமி பத$_{3}$ாம்பு$_{3}$ருஹைக பே$_{4}$ாகே$_{3}$ |
ராமாநுஜாஹ்வய முநெள க்ருத ஸர்வ பாரம்
ராமாநுஜம் முநிவரம் ஸிரஸா நமாமி ||

## வாழி திருநாமம்

தேனமரும் செம்பதுமத் திருத்தாள்கள் வாழியே
செக்கர் நிறத்து எழிலாடை சேர் மருங்கும் வாழியே
தானமருள் கைத்தலமும் முக்கோலும் வாழியே
தடம்புயத்தில் இயங்கும் இருசங்காழி வாழியே
ஞானம் அன்பு வடிவாகும் நங்கள் இராமானுச
நன்முனிவர் தாளிணைகள் நவில் பவளம் வாழியே
ஈனமற எனை ஆளும் இராமானுச முனிவன்
எழிற்கனக முடி வாழி இனிதூழி வாழியே

## சீர்

வாழி அரங்கப்ப மாமுனிவன் திருப்பாதம்
வாழியவன் வரை மார்பும் மணிவடமும் - வாழியே
செண்டலர்கார முனிவன் பேரருளால் சீர் மாறன்
தண்தமிழின் ஈடுரைக்கும் சீர்